திரித்துவக் குடும்ப மாதாந்திர மலர்

# திரித்துவச்சுடர்

தனிச்சுற்றுக்கு மட்டும்

அக்டோபர் 2023




THIRITHUVASUDAR

கத்தோலிக்க திரு அவையின் பதில்களை எதிர்நோக்கி கருத்தரங்கில் ஆர்வமுடன் பங்கேற்ற இறைமக்கள்.

## பங்குத் தந்தையின் செய்தி

அருமையான பங்கு குடும்பமே! தூய தமத்திரித்துவ கடவுளின் ஆசீர் உங்களோடு என்றும் இருப்பதாக. செப்டம்பர் மாதத்தை இறைவார்த்தை மாதமாக கொண்டாடி மகிழ்ந்தோம். கடவுள் நம்மை படைத்து, அன்பு செய்து, மீட்டு, நிறைவாழ்வுக்காக அழைக்கிறார் என்பதை அறிந்துகொள்ளவும், இயேசுவின் கனவாகிய இறையரசைக் கட்டி எழுப்பும் சீடர்களாக மாறும்படியாகவும், நமது அன்றாட கிறித்தவ வாழ்க்கை இறைவனின் உயிருள்ள வார்த்தையால் வழிநடத்தப்படும்படியாகவும் விரும்புகிறோம் என்பதை உணர்த்தும் வகையிலேதான் இந்த கொண்டாட்டங்கள் அமைந்தன. தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவர்களாக, நாமே நற்செய்தியாக மாறுவோம்.

நமது திருத்தந்தை மறைபரப்பு ஞாயிறு 2023 க்காக தேர்ந்து எடுத்துள்ள நற்செய்தி பகுதி லூக்கா 24:13–35. “ஒருவரையொருவர் நோக்கி, வழியிலே அவர் நம்மோடு பேசி, மறைநூலை விளக்கும் போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா? என்று பேசிக்கொண்டார்கள். அந்நேரமே அவர்கள் புறப்பட்டு எருசலேமுக்கு திரும்பி போனார்கள். அங்கே பதினொருவரும் அவர்களோடு இருந்தவர்களும் குழுமியிருக்கக் கண்டார்கள். இது எம்மாவுஸ் சீடர்களுடைய இறை அனுபவத்தை குறிக்கும் நிகழ்வு. உள்ளம் பற்றி எரிந்தவர்களாய் தங்கள் பாதங்களை எருசலேம் நோக்கி திருப்புகிறார்கள். இயேசு எடுத்த முன்னெடுப்பால் அவநம்பிக்கை தீர்ந்து, நம்பிக்கைப் பெற்றவர்களாய் இறைச்செய்தியை உலகெங்கும் அறிவித்தனர். இயேசுவே உயிருள்ள வார்த்தை, அவர் மட்டும் நமது உள்ளங்களைப் பற்றி எரியச்செய்து இறையரசுக்காக நம்மை மாற்றுகிறார். குளிர்ந்த ஒரு இதயம் மற்ற இதயங்களைப் பற்றி ஏரியச்செய்ய முடியாது. நமது தனி இறை அனுபவத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளாமல் இருக்க முடியாது.

## திருத்தந்தையின் மன்றாட்டுக்கருத்து



கூட்டியக்கத் திரு அவைக்காக:
செவிமடுத்தலையும், உரையாடலையும் ஒரு வாழ்க்கை முறையாக ஒவ்வொரு நிலையிலும் ஏற்றுக் கொண்டு, உலகின் எல்லைகளை நோக்கித் தூய ஆவியால் வழிநடத்தப்பட, திருஅவை தன்னையே அனுமதிக்கும்படியாக நாம் மன்றாடுவோம்.

We pray for the Church, that she may adopt listening and dialogue as a lifestyle at every level, and allow herself to be guided by the Holy Spirit towards the peripheries of the world.

மிகுந்த பலனைத் தர, நாம் எப்போதும் கிறித்துவோடு இணைந்திருக்க வேண்டும். நமது திரு அவையின் அனைத்து செயல்களின் வழியாக இறைவனின் நற்செய்தியை தனி மனிதர்களாக மற்றும் குழுவாக அறிவிக்க வேண்டும். நற்செய்தி பணிக்காக நமது சாட்சிய வாழ்வு, செபம், செயல்பாடுகள், தியாகம், கொடைகள் மூலம் முன்னேடுத்துச் செல்ல வேண்டும். நற்கருனையின் ஆண்டவர் நம்மை அன்றாடம் வழிநடத்துவாராக.

Dear Friends, May you be blessed ever by the Holy Trinity. I sincerely appreciate and thank all for your cooperation in all the church activities that happened in the month of September. Our Holy Father Pope Francis has given a message for World Mission Day 2023. The theme he has chosen is "Hearts on Fire, Feet on the Move” (St Luke 24: 13-35). In this passage, we see the true disciples leaving from Jerusalem to Emmaus. The hearts of the two disciples were downcast because of the death of Jesus, in whom they had believed. Faced with the failure of the crucified master, their hopes that he was the messiah collapsed. Amid their bewilderment, the Lord takes the initiative. He approaches them and walks alongside them. He explained to them what it was said in all the scriptures concerning him. The hearts of disciples thrilled as they heard the word. Jesus alone can make our hearts burn within us, as he enlightens and transforms them. A cold heart can never make other hearts burn. The image of "Feet setting out" remains once more of the perennial validity of evangelising all individuals and people. All of us can contribute to this missionary initiative, with our prayers and activities, with material offerings and the offering of our sufferings, and with our personal witness. Let us set out to make the hearts burn with the Word of God and to invite everyone to walk together on path of the peace and salvation that God in Christ, has bestowed upon all humanity.

உங்கள் அன்பு பங்குப் பணியாளர்
பீட்டர் தும்மா

# விவிலிய அரங்கேற்றம்

செப்டம்பர் மதத்தின் முதல் ஞாயிறு (23 ஆம் தேதி), நம்முடைய பங்கு ஆலயத்திலும், குடும்பங்கள், அன்பியங்கள், மற்ற குழுக்களிலும் இறைவார்த்தை அரங்கேற்றம் நடைபெற்றது. இந்த அரங்கேற்ற நிகழ்வின் செபப் பகுதிகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிட்டு தரப்பட்டது. இறைவார்தையானது நமது உள்ளங்களிலும் இல்லங்களிலும் இருந்து எப்போதும் நம்மை வழிநடத்தட்டும்.

**On Sept 3 (Sunday), we had the enthronement of the Word of God in our parish and also encouraged to have it in our families, BCCs and other groups. To aid this meaningful celebration, we had prepared a short para- liturgy in Tamil and English. May the Word of God always guide our hearts and minds.**

# இறைவார்த்தை எழுதுதல்

செப்டம்பர் மாதம் 10 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற ஒவ்வொரு திருப்பலிக்குப் பிறகு இறைமக்கள் மற்றும் மறைக்கல்வி சிறுவர் சிறுமிகள் தங்கள் உள்ளத்தைப் பற்றி எரியச்செய்யும் ஒரு இறைவார்தையை பெரிய துணியில் எழுத ஊக்குவிக்கப்பட்டனர். நம் பங்கு மக்கள் காட்டிய ஆர்வம் அலாதியாய் இருந்தது. இறைவனின் உயிருள்ள இறைவார்த்தை நமது கிறித்தவ வாழ்க்கையை மேம்படுத்துவதாக.

**On Sept 10 (Sunday), after all the Masses were over, the parishioners were asked to Write a Bible verse on a drape. Many people, including the catechism boys and girls participated in this exercise with great interest. May God bless you all.**



# இறைவர்த்தை வாசித்தல்

செப்டம்பர் 17 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணிக்கு அனைவரும் ஆலயத்தில் கூடினோம் புனித பவுலடியாருடைய உரோமையர் திருமுகத்தை அன்பியங்கள் வாரியாக, ஒவ்வொரு அதிகாரமாக வாசிக்கப்பட்டது. அனைவரும் தங்களுடைய விவிலியத்தைப் பயன்படுத்தினார்கள். உரோமையர் 10:17 ல் சொல்லப்பட்டது போல, அறிவிப்பதைக் கேட்டால்தான் நம்பிக்கை உண்டாகும். கிறித்துவைப் பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டால்தான், அதைக் கேட்க வாய்ப்புண்டு. இறைவார்த்தையை கேட்பதின் வழியாக நமது விசுவாசம் பெருகும் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு. இதன் வழியாக திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் நற்செய்தியை அறிவிக்க வேண்டியது நமது கடமை என்பதையும் நினைவூட்டியது.

**On Sept 17, we all gathered in the church at 10.30 a.m. to read and to listen to the Word of God. It was well attended and all brought their Bibles along. In Romans 10:17 it says "So then faith comes by hearing, and hearing by the word of God". By hearing the word of God, our faith grows and it is the beautiful reminder that every baptised Christian has the duty and privilege to proclaim the word.**

# அனைவருக்கும் திருவிவிலியம்

நமது பங்கு பேரவை உறுப்பினர்கள், அன்பிய தலைமைப் பொறுப்பாளர்கள், மற்றும் அன்பிய இறைவேண்டல் பொறுப்பாளர்கள் ஒன்று சேர்ந்து அவரவர் அன்பியங்களில் உள்ள குடும்பங்களை சந்தித்து அனைவருக்கும் ஆளுக்கொரு திருவிவிலியம் உண்டா என்ற கணக்கெடுப்பை நடத்தினார்கள். அதன்படி தமிழில் 300 திருவிவிலியங்களும், ஆங்கிலத்தில் 20 திருவிவிலியங்களும், இந்தியில் 2 திருவிவிலியங்களும் ஏற்பாடு செய்யப்பட்டன. இப்பொழுது நமது பங்கில் ஆளுக்கொரு விவிலியம், நாளுக்கொரு அத்தியாயம் என்ற முழக்கத்தினை முன்னெடுத்துச் செல்கிறோம். இதற்காக ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி. திருவிவிலியங்களை நமது கரங்களில் மட்டுமல்ல, மாறாக நமது இதயங்களிலும் இறைவார்த்தையை பதிய வைப்போம்.

**Our parish council members, BCC co-ordinators and BCC prayer team members conducted a survey to see if everyone had a Bible. As per the requirements, 300 in Tamil, 20 in English and two bibles in Hindi were arranged. Certainly, it was a great exercise to contact all the families in the parish and make the Holy Bibles available. Our sincere appreciation and thanks to all those who contributed to this project. Let us put the Bible not only in our hands but also in our hearts.**

# திரு அவையின் பதில்கள்

நமது கத்தோலிக்க தாய் திரு அவை, வளங்கள் நிறைந்த ஒரு திருஅவை. பல்வேறு கலாச்சாரங்கள், மொழி, பண்பாடுகள் மாற்றும் தொன்மையும் கொண்ட திருஅவை. இந்த திரு அவையானது கடவுளால் நமக்குத் தரப்பட்ட ஒரு கொடை. மக்களின் ஆன்மீக மற்றும் அனைத்து வளர்சிகளையும் ஊக்கப்படுத்துகின்ற உயிரோட்டம் நிறைந்த திருஅவை. இந்த திரு அவையில் அங்கத்தினராக இருப்பது கடவுளின் அருளே. இத் திருஅவையின் நம்பிக்கைகள், செயல்பாடுகள், வாழ்வுமுறை போன்ற பலவற்றைக் குறித்து சில ஐயப்பாடுகள் நமக்கு இருக்கலாம். அல்லது மற்றவர்கள் நம்மிடம் திருஅவையைப் பற்றி கேள்விகள் கேட்டிருக்கலாம். இவற்றை தெளிவுப் படுத்துவதற்காக திரு இருதய குருத்துவ கால்லூரியின் பேராசிரியர்கள் அருட் தந்தையர் ரேமன்ட் ஜோசப், V. அருள் ராஜ், இம்மானுவேல் ரீகன் மற்றும் பீட்டர் தும்மா நமது கேள்விகளுக்கு விளக்கம் அளித்தனர். இந்த நிகழ்வும் நம் அனைவருக்கும் பயனுள்ள வகையில் அமைந்திருந்தது. மற்ற பங்குகளிலிருந்தும் சிலர் கலந்து கொண்டனர். அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. இந்த சிறப்பான அமர்வை நடத்த உதவி செய்தவர்களுக்கும், பங்கெடுத்தவர்களுக்கும் நமது பாராட்டுகளும் நன்றியும்.

**On Sept 24 (Sunday), an interesting and meaningful programme was organised in our parish. All of us have questions, regarding our Catholic Church and sometimes other people would have questioned us the way we live our catholic life. Such questions were collected from our Basic Christian communities and we invited professors from Sacred Heart Seminary, Poonamallee to answer them. It was well organised and there was a good response from our parish and neighboring parishes. We sincerely thank the professors and others for their help and participation. Lunch was served to all.**



# தம்பதியருக்கான கருத்தரங்கு

திருமண வாழ்வு அழகான அற்புதமான ஒரு வாழ்வு. கணவரும் மனைவியும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு அன்பு செய்து, உற்சாகப்படுத்தி, விட்டுக்கொடுத்து, மன்னித்து, வாழ அழைக்கப்படுகிறோம். ஞானத்தோடு ஒரு குடும்பத்தை வழி நடத்த, நல்ல பயிற்சியும் மற்றவர்களின் முன் உதாரமான அனுபவங்களும் சிறப்பாக உதவுகின்றன. நமது சென்னை – மயிலை குடும்ப நல பணியகம் தம்பதியருக்காக அக்டோபர் மாதம் 15 ஆம் தேதி சிறப்பு கருத்தரங்கை நடத்த உள்ளனர் (மாலை 3:30 மணிவரை). தம்பதியர் பொறுப்பாளர்கள், தங்கள் அன்பியங்களில் உள்ள தம்பதியர்களை சந்தித்து, இக் கருத்தரங்கில் பங்கெடுக்க தூண்டுகோலாக இருங்கள். கலந்து கொள்வதற்கு கருத்தரங்கில் முன்பதிவு செய்ய வேண்டும். அனைவருக்கும் உணவு வழங்கப்படும். அனைவரும் கலந்துகொண்டு இறைத் திட்டத்திற்கு ஏற்றபடி நமது குடும்பங்களை வழிநடத்துவோம். முன்பதிவுக்கு தொடர்பு கொள்ளவும்: அருட்தந்தை சூசை ராஜ், திரு மார்க் மற்றும் திருமதி லீமா: 9171340394.

**On October 15, our parish will be joining hands with the Archdiocesan Family Commission, Madras - Mylapore to conduct a seminar for couples in our parish. Our BCC Couples' ministry leaders and others are asked to encourage their BCCs beloved couples to be part of this seminar. Interested couples need to book in advance. Lunch will be served. The seminar timing is from 10.30 a.m. to 3.30 p.m. To register contact Rev. Fr. Susai Raj, Mr. Mark or Mrs. Leema (9171340394).**



# மறைபரப்பு ஞாயிறு

அக்டோபர் மாத்தத்தை நற்செய்தி அறிவிப்பு மாதமாக கொண்டாடுகின்றோம். இதை ஒட்டி, வரவிருக்கும் ஞாயிற்று கிழமைகளில் சிறப்பான கொண்டாட்டங்கள் நடைபெற உள்ளன. அக்டோபர் மாதம் 22 ஆம் தேதி மறைபரப்பு ஞாயிறை கொண்டாட உள்ளோம். நற்செய்தி அறிவிப்பு என்பது நம் ஒவ்வொருவருடைய தலையாய பணி என்பதை உணர்வோம்; நம் ஆழ் மனதில் இருத்துவோம். நமது செபம் மற்றும் பொருளாதார உதவி மூலம் நற்செய்தியினை உற்சாகத்தோடு செயல்படுவோம். கடந்த ஆண்டு நாம் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளின் வழி ரூ.5,50,000/– நிதி திரட்டி மறைபரப்பு பணிகளுக்காக வழங்கினோம். தொடர்ந்து இந்த ஆண்டும் சிறப்பாக செயல்படுவோம்.




**Our parish will be organising many programmes in October. Every celebration calls us to be a missionary disciple to announce the good news to individuals and to other people. We cannot keep to ourselves the love, we celebrate in the sacrament of the Eucharist. By its very nature it has to be communicated to everyone. By our prayer, sacrifices and by material offerings all of us can contribute to proclaim the Word of God. We will have our Mission Sunday celebration on Oct 22. Last year, we contributed Rs.5,50,000/- for our evangelisation work. Let's do better this year.**

# நற்செய்திப் பணிக்கான ஏலம்

நாம் அனைவரும் ஒரே பங்கு குடும்பமாகஒன்றிணைந்து நற்செய்தி பணிக்காக பல விதங்களில் சேகரிக்க உள்ளோம். கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் ஏலம் நிகழ்ச்சியை அக்டோபர் 22, தேதி ஞாயிற்றுக் கிழமை நடத்தவிருக்கிறோம். இந்த ஏலத்திற்காக நீங்கள் பயன்படுத்தாத புதிய பொருட்கள் (ஆடைகள், மின்சார மற்றும் மின்னணு பொருட்கள் மற்றும் பரிசு பொருட்கள் போன்றவை) பங்கு அலுவலகத்தில் அக்டோபர் 19 வியாழக்கிழமைக்குள் உதவி பங்குத்தந்தையிடத்தில் சேர்க்கும்படியாக கேட்டுக்கொள்கிறோம். தாராள உள்ளத்தோடு புதிய பொருட்களை வழங்க முன்வாருங்கள்.

**Like every other year, we are planning to organise an auction to generate funds, for the mission purpose this year too. We are collecting new clothes, bedcovers, utensils, electrical and electronic gadgets, gifts, books and other things for the auction. The auction will take place on Oct. 22 (Sunday). Please be generous in donating and also in buying things for this noble cause. You can hand over these articles to Fr. Susai Raj, Asst. Parish Priest.**

# சிறு சேமிப்பு உண்டியல்

நற்செய்தி பணிக்காக பல்வேறு விதங்களில் நாம் நிதியை திரட்டும் வண்ணம் குழந்தைகள் மற்றும் பெரியோர்களுக்கு சிறுசேமிப்பு உண்டியல் வழங்கி சேகரிக்க உள்ளோம். பெற்றோர்களும், பெரியோர்களும் நற்செய்தி அறிவிப்பு பணியின் முக்கியத்துவத்தை பிள்ளைகளுக்கு உணர்த்தி, தங்களின் தியாகக் காணிக்கைகளை இந்த உண்டியல்களில் வழியாக செலுத்த ஊக்கப்படுத்த வேண்டுகிறோம்.



**As a community of believers, we do understand the importance and the necessity of evangelisation. To promote this ministry of the church, along with prayer, we have to mobilise funds. We are distributing dumb boxes to children and interested families. Dear parents and elders, please encourage your child to be involved in this evangelisation ministry. Let our children know the value of Mission Sunday.**

# சிறப்பு திருப்பலி

செப்டம்பர் மாதம் முழுவதும் இறைவார்த்தை கொண்டாட்டத்தை பல சிறப்பு நிகழ்வுகளின் மூலம் நடத்தியுள்ளோம். நம் மக்களுக்கு இறைவார்த்தையோடு நெருக்கத்தை ஏற்படுத்தியுள்ளோம். நமது செபக்குழுவினர் ஒவ்வொரு நாள் மாலையிலும் செபமாலை, நற்செய்தி பகிர்வு மற்றும் நற்கருணை ஆராதனை வழியாக சிறப்பு சேர்த்துள்ளனர். செப்டம்பர் மாதத்தின் இறுதி நாளாகிய 30 ஆம் தேதி சனிக்கிழமை சிறப்புத் திருப்பலி ஏற்பாடு செய்து இறைவனுக்கு நன்றி செலுத்தினோம்.

**Throughout the month of September we have held a celebration of God's word with many events. Our prayer team's contribution every evening added importance through the Rosary, Gospel sharing and Eucharistic adoration. On Sept 30 (Saturday), the last day of the month, we organised a special Mass and gave thanks to the Lord.**

# 2023 OCTOBER அக்டோபர் 2023

## திருவழிபாட்டு நாட்கள்

01–10–2023
பொதுக்காலத்தின் 26 ஆம் ஞாயிறு
எசே. 18:25–28/ தி.பா. 25:4–9 / பிலி. 2:1–11/
மத்தேயு 21:28–32

08–10–2023
பொதுக்காலத்தின் 27 ஆம் ஞாயிறு
எசா. 5:1–7/ தி.பா. 80:8,11–15,18–19/ பிலி. 4:6–9/
மத்தேயு 21:33–43

15–10–2023
பொதுக்காலத்தின் 28 ஆம் ஞாயிறு
எசா. 25:6–10/ தி.பா. 23:1–6 / பிலி. 4:12–14,19–20/
மத்.22:1–4

17–10–2023 செவ்வாய்
அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார் – ஆயர் மறைசாட்சி – நினைவு
உரோ. 1:16–25/ தி.பா. 19:1–4/ லூக்கா 11:37–41

18–10–2023 புதன்
புனித லூக்கா: நற்செய்தியாளர் – விழா
தி.மொ. 4:9–17/ தி.பா. 145:10–13,17–18/ லூக்கா 10:1–9

22–10–2023
பொதுக்காலத்தின் 29 ஆம் ஞாயிறு
எசா. 45:1,4–6/ தி.பா. 96:1,3–10 / 1தெச. 1:1–5/
மத்தேயு 22:15–21

28–10–2023 சனி
புனிதர்கள் சீமோன் மற்றும் யூதா: திருத்தூதர்கள் – விழா
எபே. 2:19–22 / தி.பா. 19:1–4/ லூக்கா 6:12–19

29–10–2023
பொதுக்காலத்தின் 30 ஆம் ஞாயிறு
விப. 22:21–27/ தி.பா. 18:1–3,46,50/ 1தெச. 1:5–10/
மத்தேயு 22:34–40

## உலக நாட்கள்

1, அக்டோபர் : சர்வதேச முதியோர் தினம், உலக இசை தினம்
2, அக்டோபர் : உத்தமர் காந்தி பிறந்த தினம், உலக அகிம்சை தினம்
4, அக்டோபர் : உலக விலங்குகள் தினம்
5, அக்டோபர் : உலக ஆசிரியர்கள் தினம்
6, அக்டோபர் : உலக புன்னகை தினம்
8, அக்டோபர் : இந்திய விமானப்படை தினம்
9, அக்டோபர் : உலக தபால் அலுவலக தினம்
10, அக்டோபர் : இந்திய அஞ்சல் தினம்
11, அக்டோபர் : உலக பெண் குழந்தைகள் தினம்
14, அக்டோபர் : உலக தரக்கட்டுப்பாடு தினம்
15, அக்டோபர் : உலக மாணவர்கள் தினம்
17, அக்டோபர் : சர்வேதேச வறுமை ஒழிப்பு தினம்
20, அக்டோபர்: இந்திய ஒற்றுமை தினம்
21, அக்டோபர் : காவல் துறை தியாகிகள் தினம்
24, அக்டோபர்: உலக போலியோ ஒழிப்பு தினம்

## நமது பங்கின் செப்டம்பர் மாத அருட்சாதன நிகழ்வுகள்

### திருமுழுக்கு

- வேதவன் ராஜ்
- தீபக் சேன்
- செனவுரா கபிரியேல்

வரவேற்கிறோம்



## உணவுத் திருவிழா

அக்டோபர் மாதம் 8 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை, நற்செய்தி பணிக்காக நிதியை திரட்டும் வண்ணம் உணவுத் திருவிழா நடைபெற உள்ளது. இந்நிகழ்வை C மற்றும் D மண்டலங்கள் முன்னின்று நடத்துகிறார்கள். இந்த நிகழ்வு நல்ல முறையில் நடைபெற, பங்கு மக்கள் அனைவரும் ஒத்துழைக்கும்படி அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

**A food festival is to be held on Oct 8 (Sunday) to raise funds for our evangelisation. The organisers of this event are Zones C and D. We request all our parishioners to join hands with them to make this carnival a successful one.**




## கடுகு விதை

நமது மறைக்கல்வி பிள்ளைகளின் நம்பிக்கை வாழ்வை அதிகரிக்கும் நோக்குடன் பல வழிகளில் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். அக்டோபர் மாதம் 29 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை நம் பிள்ளைகளுக்கு ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்துள்ளோம். அதை முன்னின்று நடத்துபவர்கள் கடுகு விதை குழுவினர். பெற்றோர்களே இந்த நிகழ்வில் உங்கள் பிள்ளைகள் கலந்து கொள்ள ஊக்குவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.




**We are trying many ways to give religious education to our children. On Oct 29 (Sunday), a group called MUSTARD SEED will organize a special session for our catechism children. Parents please encourage your children to be part of this interesting programme.**





SAINT SEBASTIAN COMMUNITY HALL







MODERN






Arockia Sagayaraja A
Managing Director
Saffrawn
Facility Solutions Pvt Ltd.
Our Services
Housekeeping Services
Corporate Cleaning Services
Pest Control
Hotel & Restaurant Services
No.109 Padikuppam Main Road, Kamaraj Nagar, Anna Nagar West, Chennai-600040
Mail: saffrawnfacility@gmail.com Contact No.7823979791/9841892656
WWW.SAFFRAWN.IN


SONA COATING PVT. LTD.
Plot No. 2, Nithiyam Kamal, Spartan Nagar, Mugappair (East)
89396 56698 / 99419 58212 | Email: sonacoatingpvtltd@gmail.com
C SANTHOSH
www.sonacoating.in


YAHWEH PITSTOP
We Innovate Mobility
Address: No.84, 1st Main Road, Eri Scheme, Mogappair East, Ch-37.
Our Services:
Tyres
Wheel Alignment
Wheel Balancing
Puncture
Nitrogen
Foam Wash
Polishing & Detailing
Accessories
Sun Film
Seat Cover
Floor Mat
99405 21630 98409 15347
Door Step Assistance & Delivery



ROY ENGINEERINGS
MOB: 9444911378 / 9600142309
Hexagon Nut
Thread Coupling
Worm Gear
VMC Tool Catcher
Helical Gear
VMC Atc Arm
Gear Shaft
Bevel Gear
Aluminium Flange
PB Worm Gear Shaft
PB Nut
Brass Gear Shaft
Spur Gear
Nylon Bush
PB Spur Gear


EICQU
STUDY ABROAD
& VISA
10+ COUNTRIES
100+ UNIVERSITIES
CONTACT US
08270871090
5th Floor, Awfis, Uthamar Gandhi Rd, opp. The Park Hotel, Nungambakkam, Chennai, Tamil Nadu 600034
More Information : www.eicqu.com


RAMESH
HARDWARES
DR. FIXIT
WATERPROOFING EXPERT
asianpaints
FinOlex
PIPES
Asian Paints | Sanitary Wares | Pipes
Fitting Godrej Locks | Welding Googs
Valaiyapathy Salai, Mogappair East
Mob: 79043 88322


WIGEON TOWERS
Property Developers
P. ROSARIO JOHN KENNEDY
MANAGING DIRECTOR
96001 57835
AISHWARYA AVENUE -1
Podavur Village kanchipuram,
Near Parandur
MADHAVARAM
Vadaperumbakkam
Perungavur-2
Chennai 600 103
SUMATHI AMMAL NAGAR
Oragadam Junction
Kunnavakkam
Kancheepuram District
R. Ramesh Babu
Manager
98849 88340
Layout only
Ph No: 044-4851 5365, 044-4767 1228


WIGEON
TECHNOLOGIES
P. ROSARIO JOHN KENNEDY
MANAGING DIRECTOR
96001 57835
Mfrs.of Jigs & Fixtures,
Press Tools & Machine
Spare Jig Boring
& Fabrication job works
No: 74/9, Periyar 5th cross street, Srinivasa Nagar, Padi
Ph no: 044- 26252333
Mail Id: wigeontech12@gmail.com


YOUR EASY AND FASTEST WAY OF GROCERY SHOPPING
SHOP NOW
ABEL
GROCERY STORE
Natural product with great price
SUPER SALE
44/20, Nehru Nagar, 1st street, Ambattur, Chennai - 600053
FOR MORE INFORMATION, CONTACT
ABEL MALIGAI MANDI - 9940172355
WHATSAPP ORDER FOR DOOR DELIVERY


R. INBARAJ
Proprietor
M: 9382139151
Manpower / staffing (Regular & Contractual)/ all the HR allied services
ROYAL ASSOCIATES
Placement & Consultants
(ISO 9001:2015 Certified Company)
3/475 Valayapathi Salai, Mugappair East, Chennai 600 037.
Tel: 26561970 Email: royalcorporate@gmail.com. www.royalassociates.co


NEWALL ENGINEERING WORKS
Mfrs of Cutting Tools &
Precision Engineering Components
M: 99401 54897, 98400 54817
www.newallengg.in